301

Reg. No. M. 1534.

12 JAN 40

R. C. Training
School Magazine,
Trichinopoly.

திருச்சினப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கோத்து 22	டிசம்பர் - ஜனவரி 1931 - 32	மலர் 6 - 7

பத்திராதிபர் குறிப்புகள்

சென்னை சட்டசபையார் ஏற்றுக்கொண்ட
த மசோதாவைப்பற்றி சென்னையிலும்
கூடும் சங்கங்களில் பேசிவருகிருர்கள்.

JC
ஙாயா, N11PP
N31. 22. 6-7.
182287

அதில் மாணவர் சம்பளத்தையொட்டிய ஒரே அம்சத்தைப்பற்றித் தான் அநேகமாய்ப் பேசுகிறார்கள். சம்பளத்துக்கு ஈடாக சர்க்கார் கொடுத்துவந்த பண உதவியை நிறுத்திவிட்டார்களே யென்று ஒரு சாரார் வருத்தப்படுகிறார்கள். அதை நிறுத்திவிட்டு, பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வசூலிக்க அநுமதி கொடுத்து விட்டார்களேயென்று சந்தோஷப்படுகிறார்கள் இன்னொரு சாரார். எப்படியும் ஆரம்பப்படிப்பு பரம்புவதற்கு இது சாதகமோ பாதகமோவென்று கவலைப்படுகிறவர்கள் வெகு சிலரே.

நமது கத்தோலிக்குப் பாடசாலைகளில் வசூலித்து வந்த சம்பளம் வெகு சொற்பம்; அதற்கு ஈடாக சர்க்கார் கொடுக்கக் கூடிய தொகையும் சொற்பமே. ஆதலால் இது விஷயத்தில் நமக்குப் பணக்கவலையில்லை. ஆனால் ஆரம்பக்கல்வி விர்த்தியாவதற்கு இந்த அம்சம் தடையாயிருக்குமோவென்றுதான் ஐயப்படுகிறோம்.

மேற்கூறிய மசோதாவில் இந்த அம்சம் மாத்திரம் புதிதாய்ச் சேர்க்கப்பட்டதில்லை; வேறு அம்சங்களும் சேர்க்கப்பட்டும் பழைய அம்சங்கள் மாற்றப்பட்டுமிருக்கின்றன. உதாரணமாக: ஜில்லாக் கல்விக் கவுன்சில் (கமிட்டியென்பது புதுப் பெயர்) அங்கத்தினர் தெரிந்துகொள்ளப்படும் விதம், தாலூகாப் போர்டுகள் கல்வி வரி வசூலிக்கும் விகிதம் முதலியன. இந்தத் திருத்தமெல்லாம் ஆரம்பப் படிப்பைச் சீர்திருத்திவிடுமாவென்று அநுபோகத்தில்தான் அறியவேண்டியிருக்கிறது. இந்த மசோதா சென்னை கவர்னர் அங்கீகாரம் பெற்றுவிட்டது. இனி வைஸ்ராய் அங்கீகாரம் பெற்றுத்தான் அமுலுக்கு வரும்.

* * *

ஆரம்பப் பாடசாலைகளில் தேகாப்பியாசம் பயிற்சி வளர்ந்தோங்குவதைப்பற்றிச் சர்க்கார் கட்டளையொன்று புதிதாய்ப் பிறந்திருக்கிறது. ஆனால் விளையாடும் இடங்கள் தேடிக்கொள்ளுங்கள்; உபகரணங்கள் சேர்த்துக்கொள்ளுங்கள்; சர்க்கார் உதவியைச் சற்றேனும் எதிர்பாரக்கவேண்டாம்.

* * *

182281
சென்னை-600 008

உபாத்திமைத் தொழில் பயிலும் மாணவர்களுக்கு இவ் வருஷம் சர்க்கார் உதவிப்பணத்தைக் குறைத்தது மாத்திரமல்ல, அடுத்த வருஷம் இந்தக் குறைந்த உதவியும் கொடுப்பதாக வாக்குக் கொடுக்க முடியாதாம்; மாணவர்கள் இந்த உதவியை நம்பியிருக்கக்கூடாதாம். ஆகையால் தற்போது முதல் வருஷத்தில் படிக்கும் மாணவர்கள் தங்களுக்கு இஷ்டமானுல் உடனே போதனுமுறைப் பாடசாலைகளை விட்டு விலகிக்கொள்ளலாமாம். இதுவரையில் அவர்கள் பெற்றுக்கொண்ட உபகாரச் சம்பளத்தைத் திரும்பக் கட்டத் தேவையில்லை; ஆனுல் காலந்தாமதித்து விலகினுல் அப்படி கட்டும்படி நேரும்.

இந்த ஏற்பாட்டின் தாற்பரியம் ஏதோ? படிக்கத் தொடங்கிய மாணவர் அநேகமாய்ப் பாடசாலையை விட்டு விலகமாட்டார்கள்; ஆதலால் உபகாரச் சம்பளமின்றியே உபாத்திமைத் தொழில் பயில அநேகர் ஆயத்தமாயிருக்கிருர்கள் என்று விபரீத அர்த்தம் பண்ணிக்கொண்டு இனிமேலாக உபாத்திமைத் தொழில் பயில விரும்புவோர்க்கு உபகாரச் சம்பளமே கிடையாதென்று நிறுத்திவிடவோ?

அப்படி நிறுத்திவிட்டால், பயின்ற உபாத்திமாரின் தொகை குறையுமா? அதிகக் கெட்டிக்காரரான உபாத்திமார் கிடைக்குமா?

*** *** ***

உலகத்திலுள்ள வாலிபச் சாரணர்களையெல்லாம் ஒருங்கே சேர்த்து ஜம்பூரி (Jamboree) கூடுவது வழக்கமாயிற்று. மூன்ருவது ஜம்பூரி இங்கிலாண்டு தேசத்தில் கூடினது. நாலாவது ஜம்பூரி ஹங்கரி தேசத்தில் கொடொல்லோ பட்டணத்தில் கூடப்போகிறதாம். ஏறக்குறைய 50,000 ஸ்கௌட்கள் கூடப் போவதாக எதிர்பார்க்கிருர்கள்.

*** *** ***

திருக்குடும்பப் போதனுமுறைப் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் 21-ம் ஆண்டு நிறைவிழா நவம்பர்-மீ 22-ம் உ யன்று கொண்டாடப்பட்டது. அதன் விபரத்தை மற்ருேர் இடத்தில்

பிரசுரித்துள்ளோம். அன்று மாலை "இருட்டறைகளின் இறைவன்" என்ற ஓர் நாடகம் நமது பாடசாலை மாணுக்கர்களால் நடிக்கப்பட்டது. கதையின் சுருக்கத்தை இத்துடன் அனுப்பப்பட்டிருக்கும் துண்டு அச்சுப்பிரதியில் காண்க.

பரீக்ஷைகளை ஒழித்துவிடுவதா? திருத்திவைப்பதா?

பல நூற்ருண்டுகட்கு முன்னர், கிரேக்க சக்கரவர்த்தியான அந்தோனியஸ் பயஸ் (Antonius Pius) என்பவர் தமது தேசத்தின் தலைநகரான ஏத்தென்ஸ் (Athens) என்னும் பட்டணத்தில் ஒரு கலாசாலையை ஸ்தாபித்திருந்தனர். அதற்குத் திறமைவாய்ந்த பேராசிரியர் ஒருவரை நியமிக்கவேண்டியதாயிற்று. அன்னவருக்குச் சம்பளம் இராஜாங்க பொக்கிஷத்திலிருந்து வழங்கவேண்டியிருந்தமையால், பேராசிரியர் ஸ்தானத்தை வகிப்பவர் யார் என்று தீர்மானிக்க ஒரு போட்டிப் பரீக்ஷை நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அப்பரீக்ஷைக்கு அபேக்ஷகர்களாக வந்தவர்களில் ஒருவரைப் பொறுக்கியெடுத்து நியமணஞ்செய்ய ஒரு பரீக்ஷா முறையும் கையாளப்பட்டது. அதுவே இக்காலத்தில் சர்வ சாதாரணமாய் வழங்கி வருகின்ற பரீக்ஷா முறைகளுக்கெல்லாம் ஆதிகாரணமான முதற் பரீக்ஷை எனலாம்.

அந்தோனி சக்கரவர்த்தியார் ஆசிரியர்களிடைப் பேராசிரியர் ஒருவரைத் தெரிந்தெடுக்கப்போந்த அந்தப் பரீக்ஷை முறை, நாளடைவில் ஏனை ஆசிரியர்களால் கையாளப்பட்டு வரவே, அவர்கள் தங்கள் மாணுக்கர்களிடை அதனைப் புகவிட்டனர். அதனுல் நல்ல பயன் விளைந்ததெனக்கண்ட ஆசிரியர்கள் அம்முறையை மென்மேலும் கையாண்டுவரவே அது இற்றைநாள் வரை நீடித்திருக்கின்றது.

பின்னர், அதாவது இடைக்காலத்தில், யாராவது ஒருவரை வியாபாரச் சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்க்கவேண்டுமானுல், அவரைச் சோதித்துப் பார்த்து அவரது திறமையையறிய ஒரு

உபாயம் தேடவேண்டியதாயிற்று. அது ஏறக்குறைய சக்கர வர்த்தி அந்தோனியுஸ் அநுசரித்ததையொத்ததோர் பரீக்ஷை முறையே. ஆனல், அதை ஒழுங்குப்படுத்த நிலையுள்ளதான ஸ்தாபனமொன்றை அமைக்கவேண்டுமென்று கருதப்பட்டது. அந்த ஸ்தாபனத்திற்குரிய பரீக்ஷா கர்த்தாக்களனைவரும் ஆசிரியர்களே. எனினும், அவர்களைத் தெரிந்தெடுக்கவே முதன் முதலாக, பரீக்ஷைகளை நடத்தவேண்டியதாயிற்று. இவ்வாறு நிலையாய் நிறுவப்பட்ட முதற்சங்கமே தற்காலத்திய சர்வகலாசாலைகளுக்குத் (Universities) தாய் போன்றதாகும். அதாவது: வியாபாரச் சங்கத்தின் அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பதற்காக அமைந்த ஆசிரியர் சங்கம் ஒரு பரீக்ஷை சங்கமாக மாறி தன்னைத்தானே சோதித்துக்கொண்டதுமன்றி ஏனையோரையும் சோதிக்க முற்பட்டுவிட்டது என்றும் அதன் அம்சங்களையே நமது தற்காலத்திய யூனிவேர்சிடிகளும் அநேகமாய்க்கொண்டு திகழ்கின்றனவென்றும் அறிகிருேம்.

தற்போது, பரீக்ஷை என்பது ஒரு மாணுக்கன் எந்த குறிப்பிட்ட அறிவைப் பெற்றிருத்தல்வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்ருேே அந்த அறிவை யவன் பெற்றுள்ளான் அல்லது பெற்றிருக்கவில்லை என்று கணிக்க ஏற்பட்டுள்ள ஒரு சாதனமாகின்றது. அன்றியும் அவ்வாறு கணிப்பதற்கு எழுத்தின் மூலமாய் கேள்விகள் போடுதல், எழுத்தின் மூலமாய் விடைபெறல் என்று எழுத்துப் பரீக்ஷை ஏற்பட அவசியம் நேரிட்டுவிட்டது. தற்கால முறையையொட்டிய எழுத்துப் பரீக்ஷை முதன்முதலாக 1702-ம் வருஷத்தில் இங்கிலாந்திலுள்ள கேம்பிரிஜ் (Cambridge) கலாசாலையில்தான் நடத்தப்பட்டதாம்.

இந்தப் பரீக்ஷைமுறை வெகு சீக்கிரத்தில் மற்ற கலாசாலைகளுக்கும் பரவியதோடு அனைவருடைய நன்மதிப்பையும் பெற்றுவிட்டது. ஆங்கிலக் கல்விமுறையில் பரீக்ஷைகள் நல்ல செல்வாக்கைப் பெற்று விளங்கவே, நமது நாட்டிலும் ஆங்கிலக் கல்விமுறை அனுஷ்டிக்கப்படும்போது, அம்முறையையே இங்கும் தாராளமாய்ப் பிரயோகிக்கவேண்டியதாயிற்று. எவ்வாறெனின், ஆங்கில அரசாட்சி இந்நாட்டில் வலுப்பட்டுக்கொண்டுவருகையில்,

அரசாங்க நிர்வாகத்திற்காக உத்தியோகஸ்தர்களைப் பொறுக்க வேண்டிய நிலைமையும் வலுப்படலாயிற்று. எனவே, 1844-ம் வருஷத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்க பரீக்ஷை ஸ்தாபனங்கள் அமைக்கப்படும் என்ற உத்தரவு பிறக்கலாயிற்று. அதற்கேற்ப 1857-ம் வருஷத்தில் சென்னை, பம்பாய், கல்கத்தா சர்வகலாசங்கங்கள் (Universities) நிறுவப்பட்டன. லண்டன் சர்வகலாசங்கத்தின் மாதிரியையொட்டியே மேற்கூறிய மூன்று பரீக்ஷாசங்கங்களும் வேலை செய்யத் தலைப்பட்டன. இப்பொழுது இந்தியாவில் மேற்கூறிய மூன்று ஸர்வகலாசங்கங்களையொத்த அநேக யூனிவெர்ஸிடிகள் ஏற்பட்டுள்ளன; ஏற்பட்டும் வருகின்றன. இவையனைத்தும் பரீக்ஷா இயந்திரங்களே. இவ்வித இயந்திரங்கள் செம்மையாய் ஓடிக்கொண்டிருக்கவேண்டியது அவசியமாயினும், அவற்றைப் பழுதுபார்த்து, புதுப்பிக்கவேண்டிய அவசியம் நெருங்கிவருகின்றதென கல்விமான்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஆனால், ஒருசாரார் பரீக்ஷைகளையே அடியோடு நிறுத்தித் தொலைத்துவிடவேண்டுமென்று பிரசாரம் செய்துவருகின்றார்கள். பரீக்ஷாமுறைகளையோ விதிகளையோ மாற்றி சீர்திருத்தம் செய்வதில் யாதொரு அபிப்பிராய பேதமில்லாதபோழ்து, அதனையறவே நீக்கிவிடவேண்டுமென்று வாதிப்போரது கூற்றுதான் மிகவும் விந்தையாகவே இருக்கின்றது. பரீக்ஷைகள் செவ்வையாய் நடைபெறுவதாயின் அவற்றின் பயன் என்னவென்று ஆராய்வோமாக.

(i) **மாணுக்கர்கட்கும் ஆசிரியர்கட்கும் பயன்படுகிறது :—** பரீட்சைகளில் வாய்ப்பரீட்சை என்றும் எழுத்துப்பரீட்சை என்றும் இரண்டு விதங்கள் உண்டல்லவா? இவற்றை வருஷாந்தரப் பரீக்ஷை, ஆறுமாதப் பரீக்ஷை, மாதப் பரீக்ஷை, வாரப் பரீக்ஷை என வகுக்கலாம். இவற்றால் மாணுக்கர்களின் படிப்பையும் அதன் அபிவிருத்தியையும் படிப்படியாய் அளக்கவும், மதிக்கவும், கணிக்கவும் அநுகூலமாகிறது. பிள்ளைகளின் தேர்ச்சியை ஆசிரியர் அறிந்துகொள்ளவும் வழியேற்படுகிறது. மாணுக்கர்கள் தங்களது முயற்சியையும் உழைப்பையும் எடுத்துக்காட்ட சந்தர்ப்

பம் அளிக்கப்படுகின்றூர்கள். மேலும் படிப்பில் ஊக்கத்தை அதிகமாய்ச் செலுத்தவும் கற்றுக்கொள்ளுகின்றூர்கள்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்காக தாங்கள் உழைத்த உழைப்பின் பயனை அளந்துபார்க்க சந்தர்ப்பம் பெறுகின்றூர்கள். பிள்ளைகளின் விடைக்காகிதங்கள் ஆசிரியரின் பிரயாசையைப் பளிங்குபோல் விளக்கித் துலக்கிவிடும். மேலும், தங்களது போதனை பிள்ளைகளுக்கு எம்மட்டு பயன்பட்டதென்று மதிக்கவும், தங்கள் போதனுமுறைகளை எவ்வளவிற்கு உயர்த்தி அதிகப் பிரயோஜனமுள்ளதாக ஆக்கவேண்டுமென்று தீர்மானிக்கவும், தங்கள் போதனையின் பயனுக மாணுக்கர்களது தேர்ச்சி திருப்திகரமாய் இருந்தால் தங்களது திறமையை மேலதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டவும் சந்தர்ப்பம் அளிக்கவல்லது பரீக்ஷையே. ஆயினும், பரீக்ஷையின் உண்மையான கருத்து மற்ருென்றுளது. அதாவது: மாணுக்கர்களது அறிவைப் பெருக்குவதற்கான ஒரு சாதனமேயன்றி, கேவலம் மாணுக்கர்களைச் சோதிப்பதற்காக மாத்திரம் ஏற்பட்டதன்று என்பதே. ஒரு புத்திசாலித்தனம் வாய்ந்த ஆசிரியர் பரீக்ஷைகளைத் தமது போதனுசாதனமாகவும் மாற்றிக்கொள்ளுவர். பிள்ளைகளின் ஆயத்தமின்மை, விடைகளை எடுத்துக்கூறும் வகையறியாமை, குறிப்புள்ள விடை இன்னதென்று தெரிந்துகொள்ளாமை முதலிய குற்றங்குறைகளை எடுத்துக்காட்ட பரீக்ஷை ஏற்றதோர் சாதனம் என்றும் மதிப்பர். மாணுக்கர்களது அபிவிருத்திக்கு பரீக்ஷை எவ்வளவு அவசியமென்று மாணுக்கர்களே உணர்ந்துகொள்ளும்படி அதனையாக்குவாரேயன்றி, வகுப்பிலிருந்து வகுப்புக்கு உயர்ந்து செல்லத்தான் பரீக்ஷை நடந்துவருகிறதென்ற தப்பெண்ணத்தையும் மாற்றிவிடுவார்.

ii. **பரீக்ஷைகள் மாணுக்கர்களது கவன சக்தியை வளர்க்கும்**:—மாணுக்கர்கள், நாள்தோறும் படித்துவரும் படிப்பு மனதில் தங்கி அது நீடித்து நிலைபெற்றிருக்கவும், அதை ஒழுங்குபடுத்தி வைக்கவும், குறிப்பிட்ட காலத்தில் பரீக்ஷை என்றதோர் ஏற்பாடு அமையவேண்டியதவசியமாகிறது. மாணுக்கன் ஒரு தினத்தில் படித்த படிப்பை அத்தினத்தின் ஈற்றில் சோதனைசெய்து அத்

துடன் முடித்துவிடுவதா? பழைய பாடங்களையெல்லாம் ஒன்றுய்ச்சேர்த்துப் பார்க்கும்படியாக யாதேனுமோர் தவணை ஏற்படுத்தி, அக்காலத்தில் சோதிப்பதா? இவ்விரண்டு முறைகளில் எதன் மூலமாய் நீடித்த கல்வியறிவும் கவன சக்தியும் அமையும்? படிக்கும் விஷயத்தின் முழு விவரத்தையும் ஒழுங்குபடுத்தி பதிய வைப்பதற்கு ஒரு தினம் போதுமா? பிள்ளைகளின் கவன சக்தியை வளர்ப்பதற்கு பரீக்ஷை எவ்வளவு உதவுகிறது! பரீக்ஷை காலத்திற்கு முன்னதாக பழைய பாடங்களையெல்லாம் ஒருமனப்பான்மையுடன் திருப்பிப் பார்ப்பதால் மனம் ஒரு வழிப்படும் வழக்கம் ஏற்படும். அவ்வழக்கமே பழக்கம். அதுவே புது விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதற்கான மார்க்கம். எனவே கல்வியறிவும் பெருகுகின்றது.

iii. **போது மக்களின் விருப்பம்** :—பெற்றோர்களும், தங்கள் பிள்ளைகளின் படிப்பின் திறமையைத் திட்டமாய்த் தெரிந்துகொள்ள ஆசிக்கின்றனர். இது மிகவும் நியாயமே. அவர்களது நியாயமான கோரிக்கைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது? பிள்ளைகளின் தேர்ச்சியைப் புலப்படுத்தவல்லதான மார்க்கம் பரீக்ஷை முறைகளேயன்றிப் பிறிதொன்று கண்டுபிடிக்கப்படவில்லை. அதுவரை இதுவே சரியாகும். பெற்றோர்களுக்கேயன்றி, துரைத்தனத்தாருக்கும், பரீக்ஷைகள் முக்கிய உதவியாகின்றன. உத்தியோகசாலைகளிலும், தொழிற்சாலைகளிலும், வேலைகளையமர்த்திக் கொடுக்க, பற்பல உபாயங்களிற் பரீக்ஷா யோக்கியதை உபாயமே தலை சிறந்ததான முறை என்பது வெளிப்படை. வேலை கொடுப்போர், அபேக்ஷகர்களிடமிருந்து யோக்கியதாப் பத்திரங்கள் என்ற நற்சாக்ஷி பத்திரங்களை விரும்புகின்றனர். அப்பத்திரங்களை அளிப்பதற்கு ஆசிரியர்களும், பரீக்ஷா ஸ்தாபனங்களும் இல்லாமல் முடியுமா?

பாடசாலைகளை நடத்தும் தலைவர்களும், ஸ்தானீகர்களும், துரைத்தன அதிகாரிகளும் மாணாக்கர்களது கல்வித்திறமை, குணாதிசயங்கள் முதலியவற்றைக் குறையறயறிய விரும்புகின்றனர். அவ்வாறு தெரிந்துகொள்ளவேண்டியதும் அவர்களது பொறுப்பான கடமையாகின்றது. அதன்பேரில் நற்சாக்ஷி பத்-

திரங்களை அளிக்க சாத்தியப்படுகிறது. இது இவ்வாருக, பரீக்ஷைகளை அடியுடன் நிறுத்திவிடவேண்டுமென்று சாதித்தால், அச்சாதனை எவ்வாறு அங்கீகரிக்கப்படும்? இதுகாறும் பரீக்ஷா முறைகள் நீடித்து நிலைபெற்றிருப்பதே அதன் அவசியத்தையும் உபயோகத்தையும் புலப்படுத்துவதாகவிருக்க, அது வேண்டுவதில்லை எனும் கொள்கையை ஆராயவேண்டிய அவசியமில்லை.

மாணுக்கர்களது தேர்ச்சிக்கும், ஆசிரியர்களது முயற்சிக்கும், பெற்றோர்களது கருத்துக்கும், துரைத்தனத்தாரது கொள்கைக்கும், பொது மக்களின் சேவைக்கும், ஜனசமூகத்தின் ஊழியத்திற்கும் இன்றியமையாத பரீக்ஷா ஸ்தாபனங்கள் எவ்வாற்ருனும் நிலைபெற்றிருத்தலே தகுதியெனக் கூறியாயிற்று. இனி, அப்பரீக்ஷா முறைகளை எவ்வாறு சீர்திருத்தக்கூடும்? என்னென்ன சீர்திருத்தங்கள் தேவை என ஆராய்வோம்.

(தொடரும்)

T. S. Ganapathi Aiyar,
Teacher,
R. C. Boarding & Training School, Trichinopoly.

புலவர் பெருமிதம்

(74-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற இரண்டு திங்கட் பூங்கொத்திலும் புலவர் பெருமிதம் என்ற தலைப்பில் பெருஞ்சித்திரனரைப்பற்றிய ஆராய்ச்சி வெளிப்போந்தது. இம்மலரில் பெருந்தலைச் சாத்தனரைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். நமது புலவர் பெருமகன் ஆவூர் மூலங்கிழாரின் அருந்தவப் புதல்வரென்று தெரிகிறது. எனவே இவர் ஊரும் ஆவூரென்பது போதரும். ஆவூர் இப்பெயருடைய வூர்கள் பல இருத்தலின் இன்ன ஊர் என்று திட்டமாகத் தெரியவில்லை. எனினும் இவர் தந்தையார் ஓர் பெரும் புலவரென்பது வெளி. அவராற் பாடப்பெற்ற பல பாக்கள் அகநானூற்றிலும் புறநானூற்றிலும் காணப்படுகின்றன. தந்தையறிவு மகனறிவு என்பதற்கொப்பவும் தந்தையிற் சதமடங்கு தநயன் என்பதற்கொப்பவும் நம்புல

வர் பேரறிவாளராய் விளங்கினர். அம்மட்டேயன்றி அவரிடத்தில் **பெருமிதமும்** தலைசிறந்து விளங்கிற்று. இதை விளக்குஞ் சம்பவங்கள் சிலவற்றையும் பிறவற்றையுங் குறிப்பாம்.

நமது கவிஞர் வறுமையால் வாடினர். அவர்க்குப் பல மக்கள் இருந்தனர். இவர் தமது வறுமை மிகுதியால் வாடித் தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணன்பாற் சென்று, தம்மிடி புலப்பட, வேந்தே ஊனுண் காலமும் நிரம்பப் பெறாத முற்றா இளங்குழவிபாலற்ற வறுந்தனஞ் சுவைத்து, சுவைத்தொறு முக நோக்கியழ, அத்துயர்தாங்கா வென்மனையாள் என் முக நோக்க, யான் நின்முக நோக்கி யீண்டடைந்தேன். வெற்றிவேற் குமண! எனது வறுமையை நீ யறிந்தாயாயின், நின்னை வருத்தியாயினும் பரிசில் கொள்ளாது விடேன் என்று கூறுகின்றார். எனவே, இவரின் மிடியின் கொடுமை எவ்வளவு பெருகியிருந்ததென வுணரலாம். இந்நிலையில் நந்நாவலர் கோடையென்னு மலைக்குத் தலைவனாகிய **கடிய நெடுவேட்டுவனுழைச்** சென்றார். ஆண்டடைந்த புலவர் தம் பெருவறுமையை வேந்தன்பாற் றெளிவுறக் கூறினர். அவன் புலவர் பெருமையை யளந்தறியானாய் நெடுநாட்கள் தாழ்த்தமை யறிந்த பாவலர், சினந்து மன்னவர் பெரும

“ முற்றிய திருவின் மூவராயினும்
பெட்பின் றீதல்யாம் வேண்டலம்.”

நிறைந்த செல்வத்தை யுடைய பிரமன், விஷ்ணு, உருத்திரனாயினும் அன்றி மண்ணக வேந்தராய சேர, சோழ பாண்டியராயினும், விரும்பாக் கொடுக்கும் பரிசிலை யாம் ஏற்றுக் கோடற்குரியோமல்லேம். எதிர்த்த மன்னர் சினத்தை யடக்கி அவர் வலி கெடுக்கும் வெற்றிவாய்ந்த கொற்றவேல் வேந்தே! குன்றா ஈகையர் குலக்கொழுந்தாகிய கோடையென்னு மலைக்குத் தலைவ! நீ நீடு நின்றியிருக்கக் கருணையங் கடவுளை யிறைஞ்சுகின்றேன். கடலை யடைந்த கொண்மூக்கூழாம் நீரையருந்தி நிறைவுறாது பெயரா அவ்வாறே புரவலரை யடைந்த இரவலர் கூட்டமும் வெங்கரி பூண்ட பெருந் தேரோடன்றிப் பெயரல. நீ வருந்தற்க! யான்

77211, N11PP
N51.22.6-7

செல்வல் எனக்கூறித் தஞ்சினத்தைப் புறங்காட்டியுங் காட்டா தார்போலப் போந்தனர்.

நெடுஞ்சுரங்கள் பல கடந்து மனவலிபற்றி ஊக்கங்குன்று உளத்தராய செந்நாப்புலவர் மூவன் என்னும் குறுநில மன்னனை யடைந்தனர்.

மூவனென்பான் உருவுந் திருவும் ஒருங்குவாய்ந்த செல்லாப் பொற்புடைச் செல்வனுதலிற் பெரும்பாணர் புகழ்பாட, நறுந் தொடியர் நடநவிற்ற, நல்லிசைப் புலவர் பல்லிசை நுவல, நிலக் கிழவர் வியப்பெய்த அரியேறென்ன அரியாசனத் தமர்ந்திருந்தன். அவ்வளவிற் புலவர், மகிழ்ந்து எதிர்சென்று தம் வரவுணர்த்தினர். இரவலர்க் காணின் விரைந்தெதிர்சென்று இன்னுரைகூறிப் பொன் பல ஈதல் கடனென உணர்ந்தவனாயினும் ஏது காரணத்தாலோ மதிமயங்கிக் காலந்தாழ்த்தனன்.

காவலன் செருக்கைக் கணித்தறிந்து நாவலர் நவில்வர். பொய்கைக் கண் மேய்ந்த நாரை போர்க்கணுறங்கும் அழகிய வயற்கண், நெல்லையறுக்கு முழவர் முகைநெகிழ்ந்த இதழ்விரிந்த சேதாம்பல் மலரினின்றொழுகுஞ் செந்தேனுண்டு, படப்பைக் கய லுள கடற்கணுடுங்குன்றுச் சிறப்புடைக் கழனிசூழ்ந்த பீடுடை மரபினுடை வேந்தே! பல பழத்தையும் விரும்பித் தாம் வாழ் தற்கிடமாய் ஆகாயத்தின்கட் பறந்து, உயர்ந்தோங்கு பெருவரை முழுதுந் தேடியாண்டுள தருக்களனைத்தும் பழுத்து மீறிற்றாக மிகவருந்தி மீளும்புள்ளையொப்பப் பல்லாற்றானும் வருந்தி மீண்ட யான் நின் பெருந்தகைமையீர்ப்ப வீண்டடைந்துநின் புகழ் கூறி னேன். நசை கொடுவந்த வென்னசை பிறக்கொழிய யான் வறிதே பெயர்வேன். பெரும! நீ ஒன்றை யீத்திலையாயினும் யான் அதற்கு வருந்துவேனல்லேன். வென்றிவேலோய்! நீ நோயின்றி யிருப்பாயாக. நின் நாளோவக்கம் சிறப்பெய்துக வெனக்கூறியவன் இரந்து வேண்டவும் மதியாது சென்றனர்.

(தொடரும்)

மா. அ. சுயம்பிரகாச வுடையார்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18228

திருச்சினுப்பள்ளி திருக்குடும்பப் போதனுமுறைப் பாட சாலைச் சங்கத்தின் 21-ம் வருஷ நிறைவிழா

இப்பாடசாலைச் சங்கத்தின் 21-ம் வருஷ நிறைவிழா 22—11—31-ல் மகா-ா-ா-ஸ்ரீ தாமஸ் சீனிவாசன், M.A., L.T. திருச்சி அர்ச். சூசையப்பர் கல்லூரியின் ஆசிரியர் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் சிறப்புடன் இனிது நடைபெற்றது. அன்று இவ்விழாவைக் கனப்படுத்த சங். ஆந்ரே சுவாமியார், சங். ஆனந்து சுவாமியார், டாக்டர் L. R. பெர்ஞந்து, கவர்ன்மெண்டு போதனுமுறைப் பாடசாலையில் பயிலும் சில மாணவ உபாத்திமார்கள், இன்னும் மற்ற சீமான்கள் வெகு அலங்காரமாய் ஜோடிக்கப்பட்டிருந்த அசெம்ப்ளி ஹாலில் விஜயஞ் செய்திருந்தார்கள். முதன்முதல் கனம் அக்கிராசனதிபதி அவர்களுக்கு வாழ்த்துப்பாட்டு பாடியபின், இரு மாடல் ஸ்கூல் பையன்கள் வேறு தமிழ் பாட்டொன்று இனிமையாய்ப் பாடினுர்கள். பின்னர் "இவ்வுலகம் ஓர் மாயம்" என்று அறிவு புகட்டக்கூடிய தமிழ் சம்பாஷணையொன்று மாடல் ஸ்கூல் பையன்களால் கண்டோர் மனதைக் கவரும் வண்ணம் நடாத்தப்பட்டது. நிற்க, சங்கக் காரியதரிசி இவ்வருஷத்திய ரிப்போர்ட்டை வாசிக்க, V. ஆரோக்கியம் ஆங்கிலத்தில் சாதுரியமாய்ச் சாற்றிய பாடமொன்று ஒப்பித்தார். டாக்டர் பெர்ஞந்து என்பார் "கத்தோலிக் மறையின் போதனைகளுக்கும் சாஸ்திரத்திற்கும் முரண்பாடு கிடையாது" என்பதைப்பற்றி ஆங்கிலத்தில் உபந்நியாசம் செய்தார். அவர் நிகழ்த்திய சொற்பொருளின் சுருக்கம் பின்வருமாறு :—

பதிதர் கத்தோலிக் வேதத்தின் போதனைகளை நன்குணராமல், அம்மதத்திற்கும் சாஸ்திரத்திற்கும் எவ்வளவோ முரண்பாடுகளிருக்கின்றனவென்று சொல்லுகிறுர்கள். அவ்வாறு, உண்மையில், வித்தியாசம் காணப்படுமாயின் சாஸ்திரிகள் கத்தோலிக்கர்களாயிருந்திருக்க முடியா. ஆனுல் Lavoisier, Laplace, Boyle, Copernicus, Muller, Pasteur, Volta, Ampere, Galvani முதலிய மாகான்கள் கீர்த்திவாய்ந்த சாஸ்திர

நிபுணர்களாயும், மெய்யான மதப்பற்றுதலுள்ள கத்தோலிக்கர்களாயுமிருந்திருக்கின்றனர். இதிலிருந்து சாஸ்திரத்திற்கும், கத்தோலிக் வேதப்படிப்பினைகளுக்கும் யாதொரு முரண்பாடும் இருக்க முடியாதென்று வெளிப்படையாகிறது. மேலும் இம்மதமும், சாஸ்திரமும் கடவுளிடமிருந்தே வந்தவை. கடவுள் தானே ஒரு பெரும் சாஸ்திரிகர். ஆகையால் அவையிரண்டிற்கும் முரண்பாடு இருப்பது அசாத்தியம் என்று முடித்து அவரது இருப்பிடத்தைச் சார்ந்தார்.

பின்னர் அக்கிராசனாதிபதி அவர்கள் பலத்த சந்தோஷத்தினிடையே எழுந்து ஆங்கிலத்தில் செய்யப்பட்ட உபந்நியாசத்தை, "சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" என்று சொல்லுமாறு அங்கு விஜயஞ் செய்துள்ள யாபேரும் அறியும்வண்ணம் எளிய தமிழ் நடையில் சொன்னார்கள். கத்தோலிக் வேதம், சாஸ்திரம் விருத்தியாவதற்கு எடுத்துக்கொண்ட வழிபாடுகளையும் எடுத்துக் கூறினார்கள். அன்றியும் உபாத்திமார்கள் அடைந்த பாக்கியத்தைப்போல் வேறு ஒருவரும் அடையவில்லை; எவ்வாறெனில், அப்போஸ்தலர் ஸ்தானத்தை வகித்து அப்போஸ்தலத்துவத்தை நடத்திவரும் குருக்களுக்கடுத்தபடி, அவ்வப்போஸ்தலத்துவத்தை நடத்தப் பாக்கியம் பெற்றவர்கள் உபாத்திமார்களே. ஆகையால் கத்தோலிக் உபாத்திமார்கள், சம்பளத்தைக் கவனியாது, கற்பித்தல், அப்போஸ்தலத்துவத்தை நடத்த குருக்களுக்கு உதவிபுரிதல், ஆகிய தங்கள் கடமைகளை சரிவர அனுசரிக்கவேண்டும் என்று முடித்து, தம் ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

இறுதியாய் எமது பாடசாலையின் முன்னேற்றத்திற்காக தலைமை ஆசிரியரவர்களோடு ஒத்துழைக்கும் உதவி ஆசிரியராகிய ஸ்ரீமான் P. S. கணபதி ஐயரவர்கள் அக்கிராசனரவர்களுக்கும், மற்றும் விஜயஞ் செய்திருந்த ஏனைய கனதனவான்களுக்கும் சங்கத்தின் சார்பாக தமது மனமுவந்த நன்றியைச் செலுத்தியபின், தலைமை ஆசிரியரும் அக்கிராசனாதிபதியையும், டாக்டர் பெர்னாந்துவையும் இரண்டொரு வார்த்தைகளால் புகழ்ந்து பாராட்ட, பள்ளிக்கூட வாழ்த்துப் பாடி, கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

A. S. அருளப்பன்,
சங்கக் காரியதரிசி,
R. C. போதனாமுறைப் பாடசாலை,
திருச்சினாப்பள்ளி.

திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் போதனுமுறைப் பாடசாலைச் சங்கத்தின்
21-ம் வருஷத்திய ரிப்போர்ட்டு

இப்போதனுமுறைக் கழகத்தின் சங்க வழக்கப்படி கடந்த இருபது ஆண்டுகளாக ஒவ்வொரு வருஷத்தின் ஈற்றிலும் இச் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டம் நிறைவேறியதைப் போல, இவ்வருஷத்திலும் இன்று 1931-ம் ஹூ நவம்பர்-மீ 22-ம் வ மகா-ா-ா-ஸ்ரீ Professor தாமஸ் ஸ்ரீனிவாசன் M.A., L.T. அவர்களது அக்கிராசனத்தின்கீழ் இருபத்தோன்ரும் ஆண்டு விழா வைபவம் இனிதே நிறைவேறுகின்றது. இந்நிறைவிழா பிரதி வருஷமும் வளர்பிறைச் சந்திரனைப்போன்று மென்மேலும் இலங்கியதெனினும், இவ்வருடத்திலும் இச்சங்கத்தின் இருபத்தொன்ரும் ஆண்டு நிறையப் பெறும் கொண்டாட்டத்தைச் சிறப்புடன் கொண்டாட நாங்கள் முன்வந்துள்ளோம். ஏனெனில், நாங்கள் அடைந்த பலன் அனந்தம். இது அவையின் கண் ஐயமின்றித் தோன்றும் எங்களுடைய திறமையையும், சொல்வன்மையையும், ஞானத்தையும் வளர்ந்தோங்கச் செய்வதோடு எங்களுடைய தற்கால பிற்கால ஜீவியத்திற்கோர் வழி காட்டியாய்த் தேவையான பல அரிய விஷயங்களை உணர்த்தி நாங்கள் முன்னேறும் மார்க்கத்தைத் துலக்குகின்றது.

நிற்க இச்சங்கத்தின் முக்கிய நோக்கம், பொருளின் பெருக்கு, அங்கத்தவரின் குழாம், வீண் இடாம்பீகம் முதலியவற்றைக்கொண்டதல்லாமல், உள்ளத்தில் மறைந்து கிடக்கும் அநேக பொருள்களை ஏனையோருக்கும் பயன்படுமாறு எடுத்துக் கூறுவதும், பிற்கால ஜீவியத்திற்கு அத்தியாவசியமான பல பெரியோர்கள் கூடிய குழுவினிடை வந்து கூச்சமின்றித் தாய் மொழியால் சொற்றிறமையாய்ப் பேசும் வன்மை அடைவதும், மேலும் உபாத்திமைத் தொழில் புரியுங்கால் இத்தகையதோர் சங்கத்தை அவசியத்திற்கேற்ற வண்ணம் அமைத்தோ, அல்லது இத்தகையதோர் சங்கத்தில் ஈடுபட்டோ உழைப்பதுமாகிய சிறந்த நோக்கங்களைக்கொண்டு நடைபெற்று வருவதாகும்.

சென்ற ஆண்டின் வைபவம் மகா-௱-௱-ஸ்ரீ K. V. சுப்பையா அய்யர் அவர்கள் M.A., L.T., M. R. A. S. (London) திருச்சி ஜில்லாக் கல்வி இலாகாத் தலைவர் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அன்று இவ்விழாவைச் சிறப்பிக்க அநேக குருப்பிரசாதிகளும், கன்னியர்களும், மற்றுமுள்ள சீமான் சீமாட்டிகளும் விஜயம் செய்திருந்தார்கள். ஆசிரிய மாணவர்களிற் சிலர் தங்கள் உழைப்பின் திறமையை எண்பிக்க ஆங்கில பாஷையிலும் தமிழ் பாஷையிலும் வியாசம் வரைதல் செய்யுள் ஒப்பித்தல், உபந்நியாசித்தல் முதலிய விஷயங்களில் ஈடுபட்டு நின்றனர். இவைகளில் திறமை வாய்ந்தவர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

நாங்கள் வாரத்திற்கு ஒருமுறை தமிழில் எங்கள் சங்கத்தை நடத்தி, அதினின்று அரிய பெரிய நன்மைகளைக் கைக்கொள்வதோடு, செக்கண்டரி கிரேடுக்கென்று தனியே இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஆங்கில பாஷையில் சங்கம் ஒன்று நடத்தியும் வருகிறோம்.

கடந்த வருஷத்தில் ஆங்கில சங்கத்தில் நடந்தேறிய முக்கிய விஷயங்களாவன:—Value of lives of great men; Patriotism; Inaugural Address of the Rev. Fr. Headmaster; Teachers' contribution to national uplift; The value of knowledge of hygiene to teachers; Physical education; Sense of sight and hearing; The library and its use; History teaching in elementary schools; The value of drill, games and sports etc. சென்ற வருஷமுழுவதும் நடந்தேறிய தமிழ்ச் சங்கக் கூட்டங்கள் 27. இவற்றுள் கல்வி விஷயமாய் 6-ம், தமிழ்ப்பாட சம்பந்தமாய் 5-ம், நல்லொழுக்க விஷயமாய் 5-ம், சுகாதார விஷயமாய் 4-ம், கதாப்பிரசங்கம் 1-ம், பொது விஷயமாய் 6-ம் நடந்தேறியன. இவைகள் எங்கள்மாட்டு அன்பு பொங்கி அறுபோகம் வாய்ந்த எம் ஆசிரியர்களின் அக்கிராசனத்தின் கீழ் எங்களாலேயே பேசப்பட்டு நிறைவேறின. இச்சங்கங்களின் நடவடிக்கைகள் பிரதிவாரமும் குறிப்புப் புஸ்தகங்களில்

குறிக்கப்படுகின்றன. இத்தோடு செக்கண்டரி, ஹையர் லோயர் இந்த மூன்று கிரேடுகளுக்கும் தனித்தனியே 'கிளாச் சங்கம்' என்ற ஓர் சங்கத்தை ஏற்படுத்தி, அதில் அறிவு வளர்ச்சிக்கேற்ற தான அநேக விஷயங்களைப்பற்றிப் பேசிவருகிறோம்.

வாசகசாலை:—கடந்த வருஷம் எங்களுடைய வாசகசாலைக்கு பதினேழு வகையான பத்திரிகைகள் தருவிக்கப்பட்டன. இவ்வருஷம் அவை இருபத்துநான்காக அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை:—The Hindu Daily, Educational Review, Indian Review, Modern Review, Moga journal, Indian educator, Teaching, Catholic News, Catholic Times, The Universe, The Week, American Messenger, My Magazine, Education, Common weal, சுதேச மித்திரன் தினப் பத்திரிகை, ஷெ வாரப் பத்திரிகை, சர்வ வியாபி, ஆரோக்கிய தீபிகை, சேசுவின் திரு இருதயத் தூதன், சத்திய நேசன், ஆரம்ப ஆசிரியன், நல்லாயன், கிராம முன்னேற்றம்.

செக்கண்டரி கிரேடு, ஹையர் கிரேடு, லோயர் கிரேடுகளுக்கென்று தனியே வாரத்தில் ஒரு நாளைக்குறித்து அந்தந்த நாள்களில் நாங்கள் வாசகச்சாலைக்குச் சென்று பத்திரிகைகளை வாசித்து வருவதாலும், புஸ்தகசாலையிலிருந்து பல புஸ்தகங்களைப் பெற்று உபயோகிப்பதாலும் எங்கள் அறிவு மென்மேலும் விருத்தியடைய ஏதுவாகிறது. மேலும் இச்சங்க ஆதரவில் பழைய புதிய மாணவர்களுக்குப் பயன்படுமாறு மாதாமாதம் 'பூங்கொத்து' என்ற ஓர் பத்திரிகையும் மலர்கின்றது.

இறுதியாய் இச்சங்கத்தின் முழுப் பயனையும் நாங்கள் அடையும் வண்ணம் எங்களுக்கு எவ்விதத்திலும் எம்மோடு ஊக்கங் குன்று உதவி புரிந்து உற்சாகத்தை ஊட்டிவரும் சங். தலைமை ஆசிரியர் அவர்களுக்கும், ஏனைய ஆசிரியர் அனைவோருக்கும், தமது அலுவல்களையும் சிரமத்தையும் கவனியாது இவ்வைபவத்திற்கு எழுந்தருளி வந்திருக்கும் கனம் அக்கிராசனாதிபதி அவர்

கட்கும், உபந்நியாசகருக்கும், ஏனைய கனதனவான்களுக்கும் எங்களது தாழ்மையான மனமுவந்த வந்தனத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்

தலைவர்: S. மரிய அருள்

திருச்சினாப்பள்ளி, 22-11-1931. } காரியதரிசி: K. M. சேபஸ்தியான்

உதவிக் காரியதரிசி: S. சேபஸ்தியான்.

இந்துதேசச் சரித்திரப் பாடக்கிரமம்

1932-ம் வருஷம் முதல் T. S. L. C. சர்க்கார் பரிசைக்ஷக்குப் போகும் ஹையர் க்ரேடு மாணவர்களுக்கு உள்ள இந்துதேச சரித்திரத்தின் பாடக்கிரமம் பின்வருமாறு:—

I. பீடிகை

இந்தியாவின் இயற்கையமைப்பும் அதனால் ஜனங்களுக்கு உண்டாகும் சௌகரிய அசௌகரியங்களும்.

II. பூர்வீக இந்தியாவும் மௌரிய ராஜ்யமும் 27 B.C. வரையில்

1. ஜனங்கள்: இந்தியாவின் பூர்வீக ஜனங்கள், திராவிடர்கள், இந்து ஆரியர்கள், மங்கோலியர்கள்.

2. வேத காலம்: ரிக் வேதம், ஆரியர்களும் அவர்கள் குடியேறின இடங்களும், அவர்கள் மதமும் நாகரீகமும்.

3. இதிஹாஸ காலம்: வட இந்தியாவில் ஆரிய ராஜ்யங்கள். ராமாயணம், மகாபாரதம். அக்காலத்தின் சமூக வாழ்வும், ராஜ்ய நிர்வாகமும்.

4. புத்த மதமும் ஜைன மதமும்: கௌதமர், மகாவீரர், மகதராஜ்யம்.

5. பாரசீகர் படையெடுப்பு: டரயஸ், அவருடைய இந்திய தூதர், க்ரேக்கர்கள், அலெக்ஸாண்டரும் அவருடைய படையெடுப்பும்.

6. மௌரிய ராஜ்யம்: சந்திரகுப்தரின் ராஜ்ய பரிபாலனம், அசோகருடைய ஜீவிய சரித்திரம், அவர் செய்த நன்மைகள், அவருடைய கல்வெட்டுக்கள்.

III. 27 B. C. முதல் மகமதியர் காலம் வரையில்

1. குப்தர்கள், அவர்களுடைய ராஜ்யம், அந்நிய நாட்டு யாத்திரிகர், ஹூணர்கள், குப்தராஜ்யத்தின் க்ஷீணதிசை.

2. புத்தமதத்தின் க்ஷீணதிசை: ஹிந்து மதத்தின் பிரபலம்.

3. ஹர்ஷராஜ்யம்: ஹியான்சான் என்ற சீன யாத்திரிகர்.

4. ராஜபுத்திரர்கள்: அவர்களுடைய ராஜ்யங்கள்.

5. தக்ஷிணம்: ஆந்திர ராஜ்யம், சாளுக்யர்கள், ராஷ்டிரகூடர்கள்.

6. தென்னிந்தியா: சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள், பல்லவர்கள்.

7. மதாசாரியார்கள்: சங்கரர், ராமானுஜர், மத்வர்.

IV. மகம்மதியர்கள்

1. மகம்மதிய மதம்: மகம்மது நபியின் ஜிவிய சரித்திரம்.

2. மகம்மதியர்களின் படையெடுப்பு: மகம்மது கிஜினி, கோரி.

3. அடிமை, கில்ஜி, துக்ளக் வம்சத்தரசர்கள்: வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் மகம்மதியர்களின் படையெடுப்பு.

4. ஆப்கனிய ராஜ்யத்தின் க்ஷீணதிசை: பாமினி ராஜ்யம்.

5. விஜயநகர ராஜ்யம்: அதன் ஸ்தாபனமும் வளர்ச்சியும். தலைக்கோட்டைச் சண்டையும், அதன் முடிவும்.

V. மோகலாயர்கள்

1. பாபர்: அவருடைய ஜீவிய சரிதம், வெற்றி, குணாதிசயங்கள்.

2. அக்பர்: அவருடைய வெற்றி, மதாபிமானம், ராஜ்ய பரிபாலன முறை, சீர்திருத்தங்கள்.

3. ஜிஹாங்கிர், ஷாஜஹான்: தக்ஷிணத்தில் செய்த வேலை.

4. அவுரங்கசீப்: குணாதிசயங்கள், மதாபிமானம், தக்ஷிணத்து மகம்மதிய அரசர்கள்.

5. மஹாராஷ்டிரர்கள்: சிவாஜி, அவருடைய ஜீவியமும் வெற்றியும்.

6. சீக்கர்கள்.

7. அவுரங்கசீப்புக்குப் பிறகு வந்த மொகலாயர்கள், மொகலாய ராஜ்யத்தின் க்ஷீணதிசை.

VI. பிரிட்டிஷ் அரசாக்ஷி

1. ஐரோப்பிய வர்த்தகர்கள்: (a) போர்ச்சுகீஸியர்கள், (b) டச்சுக்காரர்கள், (c) இங்கிலீஷ்காரர்கள், (d) ப்ரெஞ்சுக்காரர்கள்.

2. கிழக்கு இந்திய கம்பெனி: பண்டகசாலைகள்.

3. ஐரோப்பிய கம்பெனியார்களுக்குள் வியாபாரப் போட்டியும் எரிச்சலும்: டச்சுக்காரர்களின் க்ஷீணதிசை; ப்ரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம்.

4. இங்கிலீஷ்காரரும் ப்ரெஞ்சுக்காரரும்: கர்னாடக யுத்தங்கள், ப்ளாசி, பக்ஸார் யுத்தங்கள். இங்கிலீஷ்காரர் வங்காளத்தை அடைதல், க்ளைவின் ஜீவியமும் வெற்றியும், இங்கிலீஷ்காரரின் ஆதிக்கம்.

VII. கவர்னர் ஜனரல்கள்

1. வாரன்ஹேஸ்டிங்ஸ்: ஒழுங்குமுறைச் சட்டம், பிட்ஸ் இந்திய சட்டம், ஹைதர் ஆலி, மஹாராஷ்டிர யுத்தம், மைசூர் யுத்தம்.

2. காரன்வாலிஸ், சர் ஜான்ஷோர்: சீர்திருத்தங்கள், சாசுவத நிலவரித் தீர்மானம், திப்பு, மைசூர் யுத்தம்.

3. லார்ட் வெல்லெஸ்லி, ஹேஸ்டிங்ஸ்: இங்கிலாந்துக்கும் ப்ரான்சுக்கும் சண்டை, 4-வது மைசூர் யுத்தமும் முடிவும். துணைபுரி முறை, தஞ்சாவூர், கர்னாடகம் சேர்த்துக்கொள்ளுதல், மஹா

ராஷ்டிர யுத்தங்கள், மஹாராஷ்டிரர்களின் க்ஷீணதிசை, சீக்கர்களின் கிளர்ச்சி.

VIII. அரசருக்குட்பட்ட கவர்னர் ஜனரல்கள்

1. ஆம்ஹர்ஷ்ட், பெண்டிங்க்: மெட்காப், பர்மிய யுத்தங்கள், உள்நாட்டு சீர்திருத்தங்கள், தற்காலப் படிப்பின் ஆரம்பம்.

2. ஆக்லண்ட், எல்லென்பரோ: ஆப்கனிஸ்தானம், சிந்து தேசம்.

3. ஹார்டிஞ்ச், டல்ஹௌசி: சீக்கிய யுத்தங்கள், பஞ்சாப் சேர்த்துக்கொள்ளல், 2-வது பர்மிய யுத்தமும் முடிவும், சீர்திருத்தங்கள், இருப்புப்பாதைகள், தந்தி. டல்ஹௌஸியின் 'லாப்ஸ்' என்ற உரிமை.

4. கானிங்: சிப்பாய்க் கலகம், விக்டோரியா மகாராணியின் விளம்பரம்.

IX. அரசரின் நேர் ஆளுகை

1. தேசத்தின் அமைதியும் சீர்திருத்தங்களும்: பஞ்சத்தை நிவர்த்தித்தல், கல்வி, கைத்தொழில், வியாபாரம். கூட்டுறவுச் சங்கம், சமூக சீர்திருத்தங்கள்.

2. வடமேற்கெல்லை மாகாணம்: இராணுவ சீர்திருத்தம்.

3. லார்டு ரிப்பன்: ஸ்தல சுய ஆட்சியின் ஆரம்பம்.

4. மின்டோ மார்லியின் சீர்திருத்தங்கள்.

5. பெரிய ஐரோப்பிய யுத்தம்: 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தின் விளம்பரம்.

6. தற்கால இந்திய அரசாட்சி: மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள், சட்ட சபை, நிர்வாக சபை, ஸ்தல சுய ஆட்சி.

Translated
by
S. P. Subrahmanyan,
Assistant,
R. C. Bg. & Training School,
Trichinopoly.

சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியும் மின்சார சக்தியும்

(*a*) பவர் ஹவுஸ் வாய்க்கால் (Power-house Canal)

மைசூரின் முக்கிய தொழிலான தங்கச்சுரங்க வேலை நடப்பதற்கும், இன்னும் நெசவு வேலை நடப்பதற்கும், மைசூர், பங்களூர் நகரங்கள் இந்திரலோகம்போலும் "ஸிட்டி ஆவ் டோம்ஸ்" City of Domes என்று பெயர்படுவதற்கும் காரணம் அங்கு மலிவாய் தயாரிக்கப்படும் மின்சார சக்தியே. அச்சக்தி தயாரிக்க உதவியாயிருப்பது சிவசமுத்திர நீர்வீழ்ச்சி. அந்நீர்வீழ்ச்சியின் அழகையும் அதனருகில் ஏற்பட்டுள்ள மின்சார சக்தி உற்பத்திசாலையையும் இங்கு விவரிப்போம்.

மைசூர் ஒரு பெரிய பீடபூமியென்றும், அதற்குத் தெற்கு, மேற்கு, கிழக்குப்பக்கங்களில் மலைகள் ஏற்பட்டுள்ளனவென்றும், வடபாகம் மாத்திரம் சரிந்து இருக்கிறதென்றும் நமக்குத் தெரியும். மைசூரில் உற்பத்தியாகும் நதிகள் அநேகமாய் வடக்காயும் கிழக்காயும் ஓடுகின்றன. ஆனால் குடகில் உற்பத்தியாகும் காவேரி நதி சுமார் 120 மைல் மைசூரின் தென்பாகத்தில் அநேகமாய்க் கிழக்காக ஓடி அங்கு மலைகளில் ஏற்பட்டிருக்கும் பிளவின் வழியாய் மேட்டு நிலத்திலிருந்து சமநிலத்தில் விழுகிறது. இப்படி விழும் இடத்தில் சுமார் 300 அடி உயரத்திலிருந்து ஆகாச கங்கையாய் கீழே விழுகிறது. சுமார் 50 வருஷங்களுக்கு முன் வரையில் இது புண்ணிய தீர்த்தமென்று கொண்டாடப்பட்டு வந்தது. தவிர அதன் உதவியைக்கொண்டு மனித வாழ்க்கையை மேன்மைப்படுத்தவும், சௌகரியங்கள் செய்துகொள்ளவும் ஏற்பாடுகள் ஒன்றும் நடைபெறவில்லை. அதன்பின் புத்திக் கூர்மையுள்ள பெரியோர்கள் நீர்வீழ்ச்சியின் உதவியால் மின்சார சக்தி தயாரித்து அதைக்கொண்டு எவ்வித வேலையையும் செய்து கொள்ளலாமென்றும் கண்டனர். மேலும் கோலாரில் தங்கச் சுரங்கத்தில் வேலை செய்ய அதிகமான சக்தி தேவையாயிருந்தது. ஆதலால் முக்கியமாக கோலார் தங்கச்சுரங்கத்துக்கு சக்தி அனுப்புவதற்காக நீர்வீழ்ச்சிக்கு அருகில் முதன்முதலில் ஓர் சிறிய மின்சார உற்பத்திசாலை ஒன்று ஸ்தாபித்தனர்.

இப்பொழுது மைசூரில் மின்சார சக்தி ஒன்று பதிஞயிரம் பங்காகப் பெருகி, மின்சார சம்பந்தமாக ஓர் இலாகாவே நடந்து வருகிறது. மைசூர் ராஜ்யத்திலுள்ள எவ்வித வேலையும் இச் சக்தியினுலேயே நடந்துவருகிறது. சுரங்கத்தில் எவ்வித வேலையும் மின்சார சக்தியால் நடக்கிறது. நெல் குத்துதல், மாவரைத்தல், நூல் நூற்றல், துணி நெய்தல், விளக்குப்போடுதல், உலோகம் உருக்குதல், தண்ணீர் இறைத்தல், மரம் அறுத்தல் இன்னும் எண்ணில்லாத வேலைகள் வெகு லெகுவாகவும், சீக்கிரமாகவும் மின்சார சக்தியால் நடந்துவருகின்றன. மேட்டூர் அணை கட்டுவதற்கு வேண்டிய பவர் சிவசமுத்திரத்திலிருந்து கொண்டுவரப்படுகிறது.

பங்களூரிலிருந்து மைசூருக்குப் போகும் ரயில் பாதை நடு மத்தியில் அதாவது பங்களூரிலிருந்து 44 மைலில் மத்தூர் என்னும் ஸ்டேஷனிருக்கிறது. அந்த ஸ்டேஷனிலிருந்து தென் கிழக்கே 30 மைலில் சிவசமுத்திரமிருக்கிறது. வாடகை பஸ்கள் மோட்டார்கள் மத்தூரிலிருந்து சிவசமுத்திரம் செல்லுகின்றன. நாங்கள் காலை 6 மணிக்கு மத்தூர் போய் இறங்கினேம். அவ் விடமிருந்து $10\frac{1}{2}$ மணிக்குத்தான் பஸ் புறப்படுகிறது. ஆதலின் ஸ்டேஷனிலுள்ள ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு $10\frac{1}{2}$ மணிக்கு பஸ்ஸில் ஏறினேம். அவ்விடமிருந்து ரஸ்தா ஜன சஞ்சாரமில்லாத அநேகமாய் சமநிலத்தின் வழியாய் செல்லுகிறது. 16 மைலிலுள்ள மலவெள்ளியைத்தவிர ரஸ்தாவின்பேரிலோ அல்லது அருகிலோ வேறு கிராமங்கள் தென்படவில்லை. மத்தூரிலிருந்து 7 மைலுக்கு அருகில் ஏதோ கிராமமிருக்கிறதென்று சொன்னர்கள். ஆகவே பக்கத்தில் கிராமங்களோ ஜனங்களோ இல்லாத நிர்மானுஷ்யமான ரஸ்தாவில் 15-வது மைலின் அருகில் ஓர் ஏரியும் அதன் அருகில் சில நஞ்சை நிலங்களும் ரஸ்தாவின் பக்கத்தில் காணப்பட்டன. ஐந்து நிமிஷ நேரத்தில் மலவெள்ளிக் கிராமத்தில் நுழைந்தோம். நாங்கள் ஏறிப்போன மோட்டார் வண்டி தபால் வண்டியானதால் அது தபாலாபீஸ் வாசலில் நின்றது. தெருப்பிள்ளைகளும் பக்கத்திலுள்ள பள்ளிக்கூடத்துச் சிறு பிள்ளைகளும் குதூகலத்தோடு மோட்டாரைச் சூழ்ந்து

கொண்டு கூச்சலிட்டனர். அவ்விடத்தில் சற்றுப் பெரிய கிராமம் அதுதான். அதில் ஒரு போஸ்டாபீசும் ஒரு மிடில் ஸ்கூலும் உள்ளது. 15 நிமிஷம் கழிந்ததும் மோட்டார் புறப்பட்டது. முன்பு விஸ்தரித்தபடியான பிரதேசத்தின் வழியாய் 12 மைல் தூரம் பிரயாணம் செய்தோம். வண்டி வழியில் தங்கி, தாமதம் ஏற்பட இடமில்லையானதாலும், வண்டி வேகமாய் வந்தபடியாலும் $1\frac{1}{2}$ மணி நேரத்தில் காவேரியாற்றின் கரையோரம் வந்துவிட்டோம். அவ்விடம் மத்தூரிலிருந்து 28 மைல். அவ்விடத்தில் புதிதாய் ஏற்பட்டு ஓர் வாய்க்காலைத் தாண்டி காவேரியாற்றின் லேயன் கரையை அடைந்தோம். இவ்வாய்க்கால் வழியாய்த்தான் மின்சார சக்தி உற்பத்திசாலைக்கு ஜலம் கொண்டுபோகப்படுகிறது. அந்தவிடத்தில் காவேரி ஆறு அநேகமாய் மேற்கிலிருந்து கிழக்கு ஓடுவதாய் வைத்துக்கொள்ளலாம். இருந்தாலும் சற்று வடமேற்கிலிருந்து தென்கிழக்காய் ஓடுகிறது. நாங்கள் மத்தூரிலிருந்து வந்த சாலை இங்கு ஆற்றங்கரையோடு செல்லும் சாலையைச் சேருமிடத்திலிருந்து இவ்வாய்க்காலில் தலைப்பு மேற்கே $1\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கிறது. நீர்வீழ்ச்சியும் பவர் ஹவுசும் கிழக்கே $1\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கின்றன. வாய்க்கால் மதகைப் பார்க்கவேண்டியதற்காக நாங்கள் ரஸ்தாவின் மேற்கு நோக்கிச் சென்றோம். $1\frac{1}{2}$ மைல் போனதும் அவ்விடத்தில் மதகைக் கண்டோம்.

மின்சார சக்தி தயார்செய்ய சிறிது தண்ணீரே போதும். மேலும் மழை காலத்தில் அதிகத் தண்ணீர் வரும்போது அதை அடக்கமுடியாது. ஆதலில் பவர் ஹவுஸ் நீர்வீழ்ச்சியிலேயே கட்டப்படாமல் அதற்குக்கீழ் அரை மைல் தூரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அதற்குவேண்டிய தண்ணீர், நீர்வீழ்ச்சிக்கு 2 மைல் மேற்கே அணைபோட்டுத் தேக்கி தனி வாய்க்காலின் மூலம் கொண்டுவரப்படுகிறது. ஆகவே மேற்சொன்ன வாய்க்கால் மதகுக்கு அருகில் ஆற்றின் குறுக்கே தரைமட்டத்திற்கு ஓர் சுவர் எழுப்பி தண்ணீரைத் தேக்கியிருக்கிறார்கள். தண்ணீர் வெகு குறைவான சமயத்தில்கூட இவ்வணையிருப்பதால் அங்கு தண்ணீர் தேங்கி பக்கத்திலுள்ள மதகின் வழியாய் வாய்க்காலில்

ஓடி பவர் ஹவுசை அடைகிறது. வெள்ளக்காலத்தில் அணை சிறியதாயிருப்பதால் அதிகமாயுள்ள ஜலம் அதற்கு மேலாக வழிந்து அப்புறம் செல்லுகிறது. இவ்விடத்தில் முன்பு ஒரு பாலம் இருந்ததாம். அது 1924-ம் வருஷ வெள்ளத்தில் இடிந்து போய் அடிக்கட்டைகள்மாத்திரம் தென்பட்டன. அவ்வணைக்கு மேற்குப் பாகத்தில் தண்ணீர் ஓட்டமின்றி சமுத்திரம்போல் தங்கியிருக்கிறது.

அந்த இடத்திற்கு அப்புறத்தில்தான் ரங்கனாதர் கோவிலிருக்கிறது. புதர்களுக்கு இடையிலுள்ள அக்கோவிலின் ஸ்தூபிகள்மட்டும் இக்கரையிலிருந்தே தென்படுகின்றன. ஐப்பசி மாதத்தில் காவேரியில் ஸ்நானம் செய்யவும், அக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்வதற்கும் அநேக யாத்திரிகள் அங்கு வருகிறார்கள். நீண்ட சதுரமான தோணிகளின் மூலமாயே அக்கரை செல்லவேண்டும். நாங்கள் தோணிக்காகக் காத்துக்கொண்டிருக்கும்போது அங்கு ஓர் உத்தியோகஸ்தர் வந்தார். அவர் அங்கு காம்ப் (camp) செய்திருந்த ஓவர்ஸியர். சென்னை, மைசூர் ராஜ்ஜியங்களின் ஒப்பந்தத்தின்பேரில் அங்கு காவிரியில் ஓடும் தண்ணீரின் அளவை அடிக்கணக்கில் இரண்டு உத்தியோகஸ்தரு மிருந்து பதிவுசெய்து, தங்கள் தங்கள் கவர்ன்மெண்டுக்கு ஜூரி ரிபோர்ட்டு செய்யவேண்டும்.

அவர்களுக்கு (gauging party) என்று பெயர். அங்கு வந்தவர் அதைச் சேர்ந்த உத்தியோகஸ்தர். அவருடன் பேசிக் கொண்டிருப்பதற்குள் தோணியும் வந்து சேர்ந்தது. 6 அடி நீளமும் 3 அடி அகலமுள்ள அச்சிறிய தோணியினுதவியால் இரண்டு தடவையில் நாங்கள் எல்லாரும் அக்கரை சேர்ந்தோம். எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் அந்த பஸ் கண்ட்ராக்டரே வந்தார். நேராக கோவிலுக்குச்சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு நீர்வீழ்ச்சியைப் பார்க்க ஆயத்தமானோம். ஆற்றின் வலது கரையிலுள்ள அக்கோவிலிலிருந்து நீர்வீழ்ச்சி சுமார் 2 மைல் தூரமிருக்கும். ஆனால் காட்டுப்பாதை மார்க்கமாய்ப் போகவேண்டும். அன்றைக்கு முந்தின தினம் ஓர் புலி வந்து ஓர் ஆட்டுக்குட்டியைக் கொண்டுபோயிற்றென்று ஜனங்கள்

சொன்னதால், ஆற்றின் வலது கரைவழியாய்ப் போகாமல் நாங்கள் வந்த, இடது கரை வழியாகவே போவதென்று தீர் மானித்தோம். அதற்குள் மணி $2\frac{1}{2}$ ஆகிவிட்டது. அந்தவிடத் தில் ஸ்ரீ ரங்கனுதசுவாமி கோவிலும், பட்டாசார் வீடும், முசோ பரி பங்களாவும், இரண்டு மூன்று குடியானவர்கள் வீடும் தவிற வேறு வீடுகள் கிடையாது. பக்கத்திலெல்லாம், காரை முட் களும், புதரும், காடுகளுந்தான். அந்த ஓவர்ஸியர் நண்பர் அங்குள்ள முசாபுரி பங்களாவில் தேத் தண்ணீர் தயார் செய்து எங்களுக்குக் கொடுத்தார். அந்த இடத்தில் அவர் செய்த ஒத் தாசையும், மரியாதையும் மெச்சத்தகுந்தது. அவர் அங்கிருந்தே நீர்வீழ்ச்சி பார்க்கப்போகத் தாம் தம்முடைய ஆட்களைத் துப் பாக்கியுடன் அனுப்புவதாய்ச் சொன்னுர். எப்படியும் நடந்து போகவேண்டியிருந்ததால் போய்வர நேரம் பிடிக்குமென்று இடது கரை வழியாய் மோட்டார் ரோட்டில் போவதுதான் சௌகரியமென்று அவரிடம் சொல்லி விடைபெற்றுக்கொண்டு படகேறி இக்கரை வந்து சேர்ந்தோம்.

(b) பவர் ஹவுஸ் (Power House)

அப்பொழுது மாலை மணி 3-15 இருக்கும். அதற்குள் எங்களை ஏற்றிக்கொண்டுவந்த தபால் மோட்டார் வண்டி கொள் ளேகால் வரையில் போய்விட்டுத் திரும்பி வந்தது. அங்கிருந்து நேராகப் பவர் ஹவுஸ் இருக்குமிடம் சென்ருேம். போகும் ரஸ்தா அநேகமாய் மேலே சொன்ன வாய்க்கால் கரையை அடுத்தே போகிறது. நீர்வீழ்ச்சிக்கு 2 மைல் மேலே தலைப்புப் பிரித்த அவ்வாய்க்காலை அதே மட்டத்தில் மேட்டு வாய்க் காலாய்க் கொண்டு வருகிருர்கள். அவ்வாய்க்காலை நீர்வீழ்ச்சிக் குக் கீழ் அரை மைல் தூரத்தில் மறுபடியும் காவிரியில் கொண்டு வந்து சேர்க்கிருர்கள். வாய்க்கால் தலைப்புயிருக்குமிடத்திலி ருந்தே ஆறு சரிவில் ஓடிவருகிறது. மேலும் நீர்வீழ்ச்சிக்குக் கீழிலும் சரிவில் ஓடுகிறது. ஆகவே, நீர்வீழ்ச்சி 250 அடி உயர மும், அதற்கு மேலும் கீழும் ஏற்பட்டிருக்கும் சரிவினுள் வாய்க் கால் தலைப்புக்கும், பவர் ஹவுசுக்கு அருகில் ஆற்றின் ஜலமட்டத்

துக்குமுள்ள வித்தியாசம் சுமார் 400 அடி இருக்கும். இவ்வளவு மட்ட வித்தியாசம் ஏற்படுத்தும் உத்தேசத்தோடுதான் நீர்வீழ்ச்சிக்குமேலே வாய்க்காலைப் பிரித்து நீர்வீழ்ச்சிக்குக் கீழ் அதிக பள்ளமான இடத்தில் கொண்டுவந்து மறுபடியும் காவிரியுடன் சேர்க்கிருர்கள். இவ்வாய்க்காலின் அகலம் 25 அடி முதல் 30 அடிக்குள் தானிருக்கும். நீளம் சுமார் 3 மைல் இருக்கும். இவ்வாய்க்காலில் வரும் ஜலம்கூட சில சமயங்களில் அதிகமாய்ப் போய்விடுவதால் அது ஓடுவதற்குத் தனியான பாதையொன்று இருக்கிறது. தேவையான தண்ணீரை மதகின் வழியாய் அடைத்துக் குழாய்கள் மூலமாய்க் கீழே அனுப்புகிருர்கள். அந்த மேட்டிலிருந்து கீழே பார்த்தால் சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் பள்ளத்தில் பவர் ஹவுஸ் தென்படுகிறது. அதற்கருகில் காவிரியாறு பாறைகளுக்கு இடையில் ஓடுகிறது. காவிரியின் நீர்மட்டத்திற்கும் மேலேயுள்ள கால்வாயின் நீர்மட்டத்திற்கும் உள்ள செங்குத்தான தூரம் 400 அடி இருக்கும். வாய்க்காலின் தண்ணீர் கீழே பவர் ஹவுஸுக்கு 13 இரும்புக் குழாய்களின் மூலமாய் அனுப்பப்படுகிறது. அக்குழாய்கள் 1 அடி முதல் $3\frac{1}{2}$ அடி வரையில் குறுக்களவுள்ளன. இக்குழாய்கள் சற்று சரிவான கறடுமுறடான பாறைகளின்மேல் பொருத்தப்பட்டிருக்கின்றன.

மனிதர்கள் இப்பாறைகளின்மூலம் இறங்கமுடியாது. ஆதலின் அதற்காகச் சாய்வான ஓர் தண்டவாளப் பாதை போடப்பட்டிருக்கின்றது. தண்டவாளத்தில் டிராலி போய்க்கொண்டிருக்கிறது. ஒரு டிராலி மேலே இழுக்கப்படும்போது மற்ருெரு டிராலி கீழே இறங்கும். அச்சரிவு சுமார் 45° சாய்வுள்ளதாயும் மொத்தம் சுமார் 600 அடி அதாவது 1 பர்லாங் நீளமுள்ளதாயுமிருப்பதால் சாதாரணமாய் நடந்து செல்வது அசாத்தியம். ஆதலின் டிராலிகளின் மூலமாயே கீழே இறங்க வேண்டும். கீழே நாலு மெத்தைகளோடுகூடிய பவர் ஹவுஸ் (மின்சார சக்தி உற்பத்திசாலை) கட்டப்பட்டிருக்கிறது. இக்கட்டிடத்தின் அடிப்பாகத்தில் டிராலி வந்து நிற்கிறது. கட்டிடத்தின் உயரமே சுமார் 100 அடியிருக்கும். இவ்வளவு பெரிய

கட்டிடத்தை மேலேயிருந்து பார்த்தால் சிறிய வீடுபோல் தோன்றுகிறது. கட்டிடத்திற்குப் பக்கத்தில் இடிதாங்கி அமைக்கப் பட்டிருக்கிறது. சாதாரணமான கட்டிடங்களுக்கே இடிதாங்கி வேண்டியிருக்க மின்சார சக்தி அதிகமாய் தயார் செய்யும் இச் சாலைக்கு அருகில் இடிதாங்கி வேண்டியது மெத்த அவசியமே.

கட்டிடத்தின் கீழ் தளத்துக்குக்கீழ் 10, 12 அடி பள்ளத்தில் காவிரி நதி ஓடுகிறது. அங்கு காவிரியின் அகலம் சுமார் 60 அடிதானிருக்கும். எதிர்த்த பக்கம் சுமார் 100, 150 அடி உயரமான செங்குத்தான பாறைகளாலானது. பவர் ஹவுசுக்குக் கொஞ்ச தூரத்தில் வரும்போதே சத்தம் அதிகமாய்த் தோன்றும். கட்டிடத்திற்குள் நுழைந்ததும் சத்தம் காது செவிடுபடும் போலிருக்கும். தண்ணீர் 400 அடி உயரத்திலிருந்து குழாய்களின் மூலமாய் வருவதால் அதிக வேகமாயும், பலத்தோடும் விழுகிறது. விழுகிறயிடத்தில் பெரிய காற்ருடிகள் வைத்திருப்பதால் அக்காற்ருடிகள் நிமிஷத்துக்கு, வெகு வேகமாய் அதாவது ஆயிரக்கணக்கான சுற்றுகள் சுற்றுகின்றன. காற்ருடிகள் சுற்றுவதிலிருந்து காந்த விசையை உபயோகப்படுத்தி மின்சார சக்தியை உண்டுபண்ணுகிருர்கள். அந்த மின்சார சக்தியைச் சேகரித்துப் பல இடத்துக்கும் அனுப்ப அநேக இயந்திரங்கள் ஏற்பட்டுள்ளன. எங்கு பார்த்தாலும் சிவப்பு வர்ணத்தால் அபாயக் குறிப்பு எழுதப்பட்டிருக்கிறது. உலோக சம்பந்தமான சாமானைத் தொடக்கூடாதென்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. மேலே சொன்ன பவர் ஹவுஸ் 1922-ம் வருஷந்தான் கட்டிமுடிக்கப்பட்டது. அதற்கு முன்னிருந்த பவர் ஹவுஸ் மேலேயே இருக்கிறது. அதற்கு ஷேகாத்திரி பவர் ஹவுஸ் என்று பெயர். அது இருந்தபோது தண்ணீர் 100 அடி ஆழந்தான் விழுந்து கொண்டிருந்தது.

அந்தத் தொழிற் சாலைக்குள் பூமி அதிர்கிறது. அதை நினைத்தால் இப்பொழுதும் கீழே பூமி அதிர்வது போலத்தோன்றும். அவ்வளவு அதிர்ச்சி அங்கு ஏற்படுகிறது. அங்கிருந்து 35 மைல் தூரமுள்ள மைசூருக்கும், 80 மைல் தூரமுள்ள பங்களூருக்

கும், 120 மைலுள்ள கோலாருக்கும் கம்பிகள் மூலம் மின்சார சக்தி கொண்டு செல்லப்படுகிறது. 200 மைல் தூரமுள்ள சென்னைக்கு அனுப்பக்கூட அவர்கள் தயாராய் இருக்கிறார்கள். 60 மைல் தூரத்திலுள்ள மேட்டூருக்கு வேண்டிய சக்தி அவ்விடமிருந்தே கொண்டுவரப்படுகிறது. சக்தி அபரிமிதமாய்த் தயாரிக்கப்படுவதால் வெகு சரசமான விலைக்குக் கொடுக்கிறது. மைசூரில் எவ்வித தொழிலும் இச்சக்தியின் உதவியாலேயே நடைபெறுகிறது. தொழிற்சாலையில் வேலை பகலிரவு வித்தியாசமன்னியில் 24 மணியும் நடந்து வருகிறது. மேலும் மைசூர் ராஜயத்தில் இதனால் விவசாயம் விருத்தியாக ஹேதுவுண்டு. இதுவரையில் கேணியிலிருந்து தண்ணீர் கவலை ஏற்றத்தால் இறைக்கப்பட்டுவந்தது. இனிமேல் மின்சாரசக்தி குறைவான விலையுள்ளதாயிருப்பதாலும், அதை கிராமங்களுக்குக் கொண்டுபோக, தார் அடித்த காட்டு மரங்கள் உபயோகப்படுவதாலும், அதிக விலையன்னியில் இச்சக்தி வெகுதூரத்தில் உள் நாட்டிலுள்ள குக்கிராமத்திற்குக்கூட அனுப்பப்படக்கூடும். ஆதலின் அவ்விடங்களில் இச்சக்தியைக்கொண்டு நீர்ப்பாசான வசதி செய்துகொள்வதோடு கிராமாந்திர கைத்தொழில்களும நடத்தக்கூடும். இவ்வித நம்பிக்கையைக்கொண்டே கொஞ்ச நாளைக்குமுன் கிராமாந்திரத்தில் மின்சாரசக்தியை முதலில் உபயோகப்படுத்தும்போது மைசூர் திவான் ஸர் மிர்ஸா இஸ்மெயில் மின்சார சக்தியால் இனி மைசூர் ராஜ்யத்திலுள்ள கிராமங்கள் புணருத்தாரணம் செய்யப்படுமென்றும், கிராமவாசிகளின் செல்வ நிலையும், வாழ்க்கையும் விருத்தியடையக்கூடுமென்றும் தெரிவித்துள்ளார். அதன் காரணமாகவே இம்மின்சார சக்தி சம்பந்தமாக மைசூர் ராஜாங்கத்தார் ஒருதனி இலாகாவை ஏற்படுத்தியுள்ளனர். ஆதலின் இன்னும் சிலவருஷத்தில் மைசூர் ராஜ்யம், கைத்தொழிலிலும், செல்வம், பொருளாதாரம், நாகரீகம், முதலியவற்றிலும் இந்தியாவில் எந்தப்பாகத்தையும்விட முதலில் நின்று மற்ற நாட்டினருக்கு ஒரு வழிகாட்டிபோல் விளங்குமென்பது திண்ணம்.

(c) நீர் வீழ்ச்சி (Waterfall)

பவர்ஹவுஸைப் பார்த்துவிட்டு மேலே சமநிலத்துக்கு வந்தபோது மணி சுமார் $4\frac{1}{2}$ இருக்கும். அங்கிருந்து நீர் வீழ்ச்சி $\frac{3}{4}$ அல்லது ஒரு மைல் தூரமிருக்கும். நீர் வீழ்ச்சிக்கு எதிரில் ஓர் பெரும் பாறை இருக்கிறது. வண்டிகளும், மோட்டார்களும் அப்பாறை வரையில் செல்லும். அப்பாறைக்குச் சற்று கீழே 20 அடியில் ஓர் சிறிய கல்மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

அம்மண்டபம் சுமார் 12 அடி நீளம், 8 அடி அகலமிருக்கும். நீர் வீழ்ச்சியைச் சுற்றி அரைமைல் தூரத்துக்குள் இம்மண்டபத்தைத் தவிர வேறு கட்டிடம் இல்லையென்றே சொல்லலாம். அம்மண்டபத்திலிருந்தும், அதற்குச் சற்று மேலேயுள்ள பாறையிலிருந்தும் நீர்வீழ்ச்சி நன்ருய்த் தெரிகிறது.

நாங்கள் அங்கு போனது டிசம்பர் மாதம். அப்பொழுது வடகிழக்குப் பருவக்காற்றுக் காலமானதால் மேற்குத்தொடர்ச்சி மலையில் மழையில்லை. ஆதலின் நீர்வீழ்ச்சியில் அதிகத் தண்ணீர் இல்லை. இருந்தபோதிலும் அக்காட்சி வெகு அழகாயிருந்தது. எதிர்த்தாற்போலுள்ள பாறைகளின் மேல் அடர்ந்த புதர்களின் வழியாய் வரும் காவிரி, நீர்வீழ்ச்சிக்கு சற்றுமேல் மூன்று பிரிவாக பிரிந்து ஒன்று சரியாய் வந்து விழுகிறது. இன்னொரு கிளை முதலில் 150 அடி விழுந்து 4 அல்லது 5 அடி தாண்டி மறுபடியும் 100 அடி செங்குத்தாய் விழுகிறது. மூன்ருவது கிளை ஒரே அடியாய் 250 அடியும் செங்குத்தாய் விழுகிறது. ஆகவே மூன்று பிரிவும் மூன்று பெரும் பூமாலை சாத்தியிருப்பது போல் தோன்றும். நாங்கள் நின்றுகொண்டிருந்த தனி மண்டப பக்கத்தின் எதிர்ப்பக்கத்தில் நீர்வீழ்ச்சி விழுகிறதென்று முன்னமேயே சொன்னோம். மண்டபத்திலிருந்து தண்ணீரின் அருகே செல்ல நேரான பாதையில்லை. ஆனல் கரடு முரடான பாறைகளுள்ள சரிவில் கைகால்களை கெட்டியாய் ஊன்றிக் கொண்டு குரங்கு நகருவதுபோல் நான்கு காலால் நகர்ந்துபோக வேண்டியிருக்கிறது. சுமார் 250 அடி பள்ளத்திலுள்ள தண்ணீர் இருக்குமிடம் போக 10 நிமிஷமாகிறது. தண்ணீருக்குப் போய்ப் பார்த்தால் மிகவும் அழகான காட்சி. எதிர்ப் பக்கம் நிமிர்ந்து பார்த்தால் நீர்வீழ்ச்சி மூன்று மாலையாக விழும் காட்சி. பின்புறம் திரும்பினல் ஒத்தை மண்டபம். காலுக்குக் கீழ் அலைமோதி ஓடும்நீர். மேலேயிருந்து விழும் நீர் பாறைகளில் மோதி நுண்ணிய நீர்த்துளிகளாய் மாறி புகைபோல் 20 அடி உயரம் கிளம்புகிறது. அங்கு நிற்கும் மனிதர்களின் உடை அந்த நீர்த்துளியால் நனைந்துவிடும். நீர்வீழ்ச்சியைப் பார்க்கச்சென்று 10 பேரில் மூவரே கீழே இறங்கினவர்கள். மற்ற எழுவரும் ஒற்றை மண்டபத்தினருகில் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் எங்களை சீக்கிரம் ஏறிவரும்படியாய் துரிதப்படுத்தியும் எங்களுக்கு அவ்விடத்தைவிட்டு வர மனமேயில்லை. கடைசியாய் நேரமாகிவிட்டதால் கையால் பாறைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு மண்டபத்துக்கு வந்து சேர்ந்து அம்மண்டபத்திலுள்ள

சுவற்றில் நாங்கள் வந்த தினம், எங்கள் பெயர் இவற்றைக் குறித்துவிட்டு மோட்டாரில் ஏறி மத்தூர் வந்து சேர்ந்தோம்.

M. Krishnamurthi Aiyar, B.A., L.T.,
Assistant,
R. C. B. & Trng. School, Trichinopoly.

சந்தாதார் பக்கம்

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

ஓர் வேண்டுகோள்

ஆரம்பாசிரிய சகோதரர்களே! தமிழ் பாஷாபிமானத்தையும் போதனுமுறையையும் நல்லொழுக்கப் பயிற்சியையும் பொது அறிவுவளர்ச்சியையும் உண்டுபண்ணுவதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு, திங்களொருமுறை மலர்ந்து நமக்கு நற்பயனை அளிக்கும் போதனுவிஷயப் பூங்கொத்தைப்பற்றி சில விஷயங்கள் கூற முன்வந்துளேன். அஃதென்னவெனில், நமது பூங்கொத்தின் வயதுக்குத்தக்க வளர்ச்சியில்லாமல் ஒரே சீராயிருக்கிறது. அதன் உட்கருத்துகள் விருத்தியாகிவந்தாலும் வெளியுருவம் மாறுததற்கு விஷயக் குறைவல்ல, பொருள் இன்மையே காரணம் எனத் தெரிகிறது. சந்தாதாரின் தொகை அதிகரித்தால்தான், நமது பூங்கொத்து பலங்கொண்டு, உற்சாகங்கொண்டு பெருத்துச் சிறந்து விளங்கும். அன்றியும் ஆசிரியர்களாகிய நமக்கு அது அதிகச் சிறந்த கருவியாயும் பெருந்துணையாயுமிருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஆதலின் இவ்வித நன்மை பயக்கும் பூங்கொத்தின் சுகத்திலும் வளர்ச்சியிலும் வளத்திலும் நலத்திலுமீடுபட்டுள்ள ஆசிரிய அன்பர்களே! நமது பூங்கொத்து அபிவிருத்தியடையை

முயற்சி எடுக்கவேண்டும். அவ்வித முயற்சி நம்கையிலேயே யிருக்கிறது. ஆகவே, நான் நமது சந்தாதார்களை வினயத்துடன் வேண்டிக்கொள்வதாவது: அன்புமிக்க நண்பர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் இவ்வருட சந்தாவை முன்னதாகச் செலுத்து வதோடு, புதிய சந்தாதார்களையும் சேர்த்துக்கொடுப்பீர்களாகில், நமது பூங்கொத்து அபிவிருத்தியடைய அநுகூலமாயிருக்கும். சந்தா அதிகமானால் பூங்கொத்தின் இதழ்கள் அதிகமாகி, விஷயங்கள் பெருகி நமக்கு அதிகப்பயனையளிக்க ஏற்றதாயிருக்கும். ஆதலால் அன்பர்களே! இன்றே இவ்வித முயற்சியிலீடுபடுங்கள். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" "முயற்சி திருவினையாக்குமன்றோ?" உழைப்புக்குத்தக்க ஊதியம் பெறலாமல்லவா?

ஆதலால் இவையெல்லாம் நன்குணர்ந்த சகோதரர்களே! பூங்கொத்து அபிவிருத்தியடையச் செய்யவேண்டும் என்ற இக்கடமை யாரைப் பொறுத்தது என்பதைச் சிந்தித்து, எனது வேண்டுகோளுக்கிணங்கி, பூங்கொத்தின்மட்டிலுள்ள அபிமானத்தை ஆசிரியர்கள் விருத்தி செய்து, இதன் உபயோகத்தை நன்குணர்ந்து இதன் விர்த்திக்காக பிரயாசைப்பட அன்பர்கள் அனைவரையும் பெரிதும் வேண்டுகின்றேன்.

D. சேபஸ்தியான்,
ஹெட்மாஸ்டர்,
போர்டு ஸ்கூல், முத்தூர்.

யோசனா விர்த்தி

விருத்தம்

சொல்லுவேன் "பெயர்ச்சொல்" ஒன்றைச் செவியிலேற்றுச்
சோதிக்கின் எழுத்தைந்தி லாகுமென்றேன்,
மெல்ல முதலுடன் மூன்றைத் தள்ளிப் பார்க்கின்,
"மிதம்" ஆகும்; நாலுடனே மூன்றிரண்டை
வல்லமையாய்ச் சேர்க்கின் "கைப்பெண்" பேராகும்;
வகை முதலும் ஐந்திரண்டும் "அரைக்கும் கல்" லாம்;
நல்ல முதல் கடைசியும் "அம்" ஆகும்; நான்கும்
நாட்டியே ஐந்தும் பார்க்கின் "தம்" என்றாமே,

T. S. S. Arokiasawmy,
Teacher,
Ulundangudi, Lalgudi Taluk.

யோசனைக் கணக்கு

$$\left\{\begin{matrix} D & 1 & 2 & C \\ 6 & E & & 5 \\ A & 4 & 3 & B \end{matrix}\right\}$$

படத்தில் காட்டியபடி ஒரு பெரிய விசாலமான பூமியில் A B C D E என்ற 5 பயிர் நிலங்களுண்டு. அவைகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச No. 1 என்ற வாய்க்கால் A என்னும் வயலுக்கும், No. 2 என்ற வாய்க்கால் B என்னும் நிலத்திற்கும், No. 3 என்ற வாய்க்கால் C என்னும் நிலத்திற்கும், No. 4 என்ற வாய்க்கால் D என்னும் நிலத்திற்கும், No. 5, No. 6 என்ற இரு வாய்க்களும் E என்னும் நிலத்திற்கும் பாயவேண்டியிருக்கிறது. வாய்க்கால்கள் ஒன்றோடொன்று சந்திக்கக்கூடாது. அப்படியானால் எவ்வாறு தண்ணீர் பாய்ச்ச முடியும்?

G. Savarimuthu,
Higher Senior,
R. C. Training School.

விடு கதைகள்

1. பக்ஷியில் சிறந்த பக்ஷி பகலிலே பறக்கும் பக்ஷி
உச்சியில் எழும்பும் பக்ஷி உயிரற்ற உருவப் பக்ஷி
சிரமிலா சிறிய பக்ஷி சிறகற்ற வர்ணப் பக்ஷி
கரமதில் தரிக்கும் பக்ஷி காரியமாய் வந்த பக்ஷி. என்ன பக்ஷி?

2. மூவிரண்டெழுத் தாலோரூரின் பேராம்
முன்னொரு நான்கெழுத்தகல நீக்கிவிட்டற்
றுவில் காப்புடைப் பொருளாம். பின்னிரண்டைத்
தள்ளிடிலோ தீஞ்சாலி எனும் பேராகும்.
தீவிரமாய்ப்பின் நான்கைச் செல்ல நீக்கிற்
செம்மலர்மேல் உரைகின்ற மாதின் பேராம்.
தீவிரைவில் முன்னிரண்டும் ஐந்தும் சேர
நீக்கிலோர் தருவின் பேர் நிகழ்த்துவாயே!

3. பூவிலும் உயர்ந்த பூ புகழ்பெரும் மனத்தின் பூ
ஆவலாய் இடும் பூ ஆண்டுதோறும் மலரும் பூ. என்ன பூ?

V. G. ஆரோக்கியசாமி,
செக். கிரேட் சீனியர்.

Permissu Superiorum
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1931

18228
சென்னை-600 008